DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No. 73/2018**

அ.சா.14

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | திரு. ராமச்சந்திரன் | Caste: | |
| Father's Name: | வீரகாளை | Calling: | சிறப்பு சார்பு ஆய்வாளர் |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | 54 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 23.02.2026

( எதிரி ஆஜர்.)

**முதன்மை விசாரணை**

நான் தற்போது திருவாடானை நெடுஞ்சாலை ரோந்து பிரிவில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு கடந்த 12.07.2017 ம் வருடம் சத்திரக்குடி காவல்நிலையத்தில் தலைமைக் காவலராக நிலைய பொறுப்பில் இருந்தபோது இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின்பேரில் இராமநாதபுரம் அரசு மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த முதலூர் கிராமத்தை சேர்ந்த சுப்பிரமணியன் மகன் சூர்யா, வயது 18 என்பவரை விசாரித்து அவர் கொடுத்த புகார் மனுவை பெற்று 12.07.2017 ம் தேதி 12.15 மணிக்கு காவல்நிலையம் வந்தேன். பின்பு நிலைய கு.எண். 170/2017 சட்டப்பிரிவுகள் 147, 148, 341, 294(b), 323, 324, 506(ii) IPC and sec 3(1)(r), 3(1)(s) of SC/ST (POA) Act ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.4**. முதல் தகவல் அறிக்கையை பரமக்குடி உட்கோட்ட

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.02.23 16:02:39 +0530

காவல்துணைக் கண்காணிப்பாளர் அவர்களின் விசாரணைக்கு அனுப்பி வைத்தேன். முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் மனுவின் அசலை பரமக்குடி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். இதுசம்பந்தமாக பரமக்குடி உட்கோட்ட காவல்துணைக் கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் இருந்து தகவல் கிடைத்தபோது நிலைய அதிகாரியாக யார் இருந்தார்கள் என்றால் ஆய்வாளர் குணசேகரன் இருந்தார். இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலை ஆய்வாளர்தான் பெற்றாரா என்றால் இல்லை. நான்தான் பெற்றேன். மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலை பதிவேட்டில் பதிவு செய்ததை காவல்துணைக் கண்காணிப்பாளர் விசாரணையின்போது காண்பித்தேனா என்றால் காண்பித்தேன். அந்த விசயத்தை காவல்துணைக் கண்காணிப்பாளர் என்னை விசாரிக்கும்போது சொல்லவில்லை என்றால் சரிதான். நான் பட்டியல் மற்றும் பழங்குடியினருக்கு எதிரான சம்பவம் குறித்து தகவல் பெற்றிருந்தால் உடனே மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கும் காவல்துணைக் கண்காணிப்பாளருக்கும் தெரிவிக்க வேண்டும் என்றும் அவ்வாறு தெரிவித்தது சம்பந்தமாக எந்த ஆவணங்களும் புலன் விசாரணை அதிகாரியிடம் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சம்பந்தமாக வழக்கு ஆவணங்களை புலன் விசாரணை அதிகாரியிடம் எப்போது ஒப்படைத்தேன் என்றால் 12.45-1.00 மணிக்குள் ஒப்படைத்தேன். ஆவணங்களை ஒப்படைத்தவுடன் டிஎஸ்பி என்னை விசாரித்தாரா என்றால் 14 ம் தேதி விசாரித்தார். முதல் தகவல் அறிக்கை

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.02.23 16:02:45 +0530

நீதிமன்றத்திற்கு யார் மூலம் எத்தனை மணிக்கு அனுப்பப்பட்டது என்பதை முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையை 12.07.2017ம் தேதி அனுப்பி வைக்கப்பட்டதாக உள்ளபோதிலும் 13.07.2017ம் தேதிதான் நடுவரால் பெறப்பட்டது என்றால் சரிதான். ஒருநாள் காலதாமதத்திற்கான காரணம் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். புகாரை யார் எழுதியது என்பது எனக்கு தெரியாது என்றால் புகார் கொடுத்த நபர் எழுதினார். சம்பவம் பள்ளி மாணவர்களுக்கிடையே நடந்த சிறுபிரச்சனை என்றும் அந்த சமயத்தில் உள்ளாட்சி தேர்தல் நடந்த காலம் என்பதால் அரசியல் அழுத்தத்தின் காரணமாக புகார்தாரர் கொடுத்த அழுத்தத்தின் காரணமாகவும் புள்ளி விவர கணக்கிற்காக இவ்வழக்கு புகாரை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் உயர் அதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க வழக்கின் தன்மையை அறியாமல் பட்டியல் மற்றும் பழங்குடியினர் சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.02.23 16:02:49 +0530

Sessions Judge,
Special Court for Trial of Cases Registered under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)